# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. தொடக்கத்தில் எதுவுமில்லை, எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
2. அவர் ஒருவரே உண்மையின், எல்லையற்ற ஞானத்தின், நற்பண்பின், சக்தியின் கடவுளாவார். அவரே நிலையானவர், எங்கும் நிறைந்திருப்பவர் அவருக்கு இணை யாருமில்லை.
3. நம்முடைய வீடுபேறு, இப்பிறவியிலும் அடுத்த பிறவியிலும் அவரை நம்புபவதையும் அவரை வணங்குவதையும் சார்ந்துள்ளது.
4. அவரை நம்புவதென்பது, அவரை நேசிப்பதிலும் அவர் விருப்பத்தைச் செயல்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

2) சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் கோவிந்த் ரானடேயின் பங்களிப்பைக் குறிப்பிடுக

**பதில் :** 1. நீதிபதி மகாதேவ் கோவிந்த ரானடே (M.G. ரானடே) சாதி மறுப்பு, சமபந்தி, சாதிமறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
2. ரானடே விதவை மறுமணச் சங்கம் (1861), புனே சர்வஜனிக் சபா (1870), தக்காண கல்விக் கழகம் (1884) ஆகிய அமைப்புகளை நிறுவினார்.

3) இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக

**பதில் :** 1. ராமலிங்க சுவாமிகள் உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் எனும் பிணைப்புகள் இருக்கவேண்டுமென்றார்.
2. அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.
3. அவர் 1856 இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரசசுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
4. 1866 இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867 இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.

4) பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை ?

**பதில் :** 1. உடன்கட்டை ஏறுதல் (சதி)
2. குழந்தைத் திருமணம்
3. பலதாரமணம்.

5) ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்களுக்காக ஜோதிபா புலே ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டுக.

**பதில் :** 1. ஜோதிபா பூலே 1852 இல் ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை புனேயில் திறந்தார்.
2. சத்தியசோதக் சமாஜ் (உண்மையை நாடுவோர் சங்கம்) எனும் அமைப்பை, பிராமணரல்லாத மக்களும் சுயமரியாதையோடும், குறிக்கோளோடும் வாழத் தூண்டுவதற்காய் நிறுவினார்.
3. பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை குறிப்பாக மறுமணம் மறுக்கப்பட்ட உயர்சாதி இந்துக்களின் மறுமணத்தை ஆதரித்தார்.
4. ஜோதிபா பூலே பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார்.
5. ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காக தங்களின் வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.

6) சீர்திருத்த இயக்கங்களுக்கும், சமயசமய இயக்கங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

**பதில் :**

| சீர்திருத்த இயக்கங்கள் | சமய இயக்கங்கள் |
|---|---|

| | | |
|---|---|---|
| i) | சீர்திருத்த இயக்கம் என்பது மிகவும் ஆழமானது சமூக மற்றும் அறிவுசார் விழிப்புணர்வை உள்ளடக்கியது | சமய இயக்கங்கள் என்பது சமயங்களை மீட்டு எடுப்பது என்பதாகும் |
| ii) | பிரம்ம சமாஜம் பிராத்தனை சமாஜம், அலிகார் இயக்கம் போன்றவை சீர்திருத்த இயக்கங்களும் எடுத்துக்காட்டாகும் | ஆரிய சமாஜம் ராமகிருஷ்ணா மிஷன், தியோபந்த் இயக்கம் போன்ற சமயப் புத்தெழுச்சி மீட்டெடுப்பு இயக்கங்களாகும் |

7) Dr. அன்னிபெசண்டின் பங்களிப்பு சிறுகுறிப்பு வரைக (அ) இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் அன்னிபெசன்டின் பங்களிப்பு யாது?

**பதில் :** (i) 1907 இல் ஆல்காட்டின் மறைவுக்குப் பின்னர் இவ்வமைப்பின் தலைவராக அன்னிபெசண்ட் (1847 - 1933) தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இவ்வியக்கம் மேலும் செல்வாக்குப் பெற்றது.
(ii) இந்திய தேசிய அரசியலில் முக்கியத்துவம் பெற்ற அவர் தன்னாட்சி இயக்கச் சங்கத்தை அமைத்து அயர்லாந்திற்கு வழங்கப்பட்டதைப் போல இந்தியாவிற்கும் தன்னாட்சி வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்.
(iii) அன்னிபெசன்ட் பிரம்மஞானக் கருத்துக்களை தன்னுடைய நியூ இந்தியா, காமன்வீல் எனும் செய்தித்தாள்களில் மூலம் பரப்பினார்.

8) சுத்தி இயக்கம் - குறிப்பு தருக

**பதில் :** (i) ஆரிய சமாஜம் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. முக்கியக் குறிக்கோள் எதிர்மத மற்றம் என்பதாகும்
(ii) ஏற்கனவே இஸ்லாமுக்கும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய இந்துக்களை மீண்டும் இந்துக்களாக மாற்ற சுத்தி எனும் சுத்திகரிப்புச் சடங்கை சமாஜம் வகுத்துக் கொடுத்தது

9) நாம்தாரி இயக்கம் யாரால் தொடங்கப்பட்டது? அதன் சீர்திருத்தங்கள் சிலவற்றை எழுதுக

**பதில் :** (i) பாபாராம் சிங் என்பவரால் தொடங்கப்பெற்ற நாம்தாரி இயக்கம் சீக்கியரிடையே நடைபெற்ற மற்றுமொரு சமூக சமயச் சீர்திருத்த இயக்கமாகும்
(ii) நாம்தாரி இயக்கம் சீக்கியர்களின் அடையாளங்களை (வாளைத்தவிர) அணிய வற்புறுத்தியது. வாளுக்குப் பதிலாகத் தனது சீடர்களை லத்தியை வைத்துக்கொள்ளும்படி ராம்சிங் கூறினார்
(iii) இவ்வியக்கம் ஆணும் பெண்ணும் சமம் எனக் கருதியது. இவ்விதவை மறுமணத்தை ஆதரித்தது. வரதட்சனை முறையையும் குழந்தை திருமணத்தையும் தடை செய்தது

10) பார்சி என்பவர்கள் யார்?

**பதில் :** பார்சி என்பவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் படிப்பறிவு பெற்றிருந்த பார்சிகளின் சமயக் கொடுமைகளிலிருந்து தப்பிக்கும் பொருட்டு ஈரானிலிருந்து பத்தாம் நூற்றாண்டில் குடிபெயர்ந்து வந்த ஜொராஸ்டியர்கள்

11) அலிகார் இயக்கம் யாரால் நிறுவப்பட்டது? அதன் நோக்கம் யாது?

**பதில் :** (i) அலிகார் இயக்கம் சர் சையத் அமைத்கான் 1875 ஆம் ஆண்டு அலிகார் நகரில் அலிகார் முகமதி ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்
(ii) அலிகார் இயக்கம் எனப்பட்ட அவரது இயக்கம் இக்கல்லூரியியைப் மையப்படுத்தி நடைபெற்றதால் அப்பெயரைப் பெற்றது. இந்திய முஸ்லீம்களின் கல்வி வரலாற்றில் இக்கல்லூரி ஒரு மைல் கல்லாகும்.
(iii) 1920 இல் இக்கல்லூரி தரம் உயர்த்தப்பட்டு பல்கலைக்கழகமானது அலிகார் பல்கலைக்கழகம் தொடர்ந்து வந்த சந்ததியினரைச் சேர்ந்தோரைக் கொண்ட ஒரு கற்றறிந்த மேதைகளின் கூட்டமாக உருவாக்கியது

12) வைகுண்ட சுவாமிகளின் சீர்திருத்தங்கள் பற்றி சிறு குறிப்புத் தருக

**பதில் :** (i) வைகுண்ட சுவாமிகளும் உருவ வழிபாட்டை எதிர்த்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் தெய்வங்களுக்கெனக் கோவில்களைப் பெற்றிருக்கவில்லை

(ii) தங்கள் தெய்வங்களை மேன்மைப்படுத்தும் பொருட்டு களிமண்ணால் அல்லது செங்கலால் சிறிய பிரமிடுகளைக் கட்டி அவற்றுக்குத் தாந்துபூசி வெள்ளையடித்து வைத்திருந்தனர்

(iii) அவ்வடிவங்களை வழிபடுவது அநாகரிகமான பழக்கம் என வைகுண்டர் கருதினார். விலங்குகளை வணங்குவதையம் அவர் நிராகரித்தார்

(iv) வழிபாட்டின்போது மக்கள் ஆடுகள்,சேவல்கள், கோழிகள், ஆகியவற்றை பலி கொடுத்தனர். இத்தகையச் சமய சடங்குகளைக் கண்டனம் செய்த வைகுண்ட சுவாமிகள் விலங்குகளைப் பலியிடுவதற்கு எதிராக இயக்கம் நடத்தினார்

13) ராமகிருஷ்ணா மிஷனின் சமூகப் பணிகள் யாவை?

**பதில் :** 1. கல்வியறிவு வழங்குவது.

2. மருத்துவ உதவி

3. இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்வது என்பனவாகும்.

14) அலிகார் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** 1. சர் சையத் அகமத்காள் 1875 ஆம் ஆண்டு அலிகார் நகரில் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்.

2. அலிகார் இயக்கம் எனப்பட்ட அவரது இயக்கம் கல்லூரியை மையப்படுத்தி நடைபெற்றதால் அப்பெயரைப் பெற்றது.

3. இக்கல்லூரி 1920 இல் தரம் உயர்த்தப்பட்டு அலிகார் பல்கலைக் கழகமானது.

4. இது இந்திய முஸ்லீம்களின் கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

15) தியோபந்த் பள்ளி பற்றி சிறுகுறிப்பு வரைக

**பதில் :** 1. தியோபந்த் பள்ளியின் பாடத்திட்டம் ஆங்கிலக் கல்வியையும், மேலைப்பண்பாட்டையும் புறக்கணித்தது.

2. இப்பள்ளியில் உண்மையான இஸ்லாமிய மதம் கற்றுத் தரப்பட்டது.

3. இதன் நோக்கம் இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கத்தையும் மதத்தையும் மீட்டெடுப்பதாய் அமைந்தது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) 19ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

**பதில் :** 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூகம் மற்றும் சமயத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலை நாட்டுக் கல்வியினால் மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல் , சமத்துவம் , சுதந்திரம் , தேசியம் மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துகளால் மிகவும் கவரப்பட்டனர் . இவர்கள் மீது கிறிஸ்துவ மதத்தின் தாக்கமும் ஏற்பட்டது. இராஜா ராம்மோகன் ராய் பங்கிம் சந்திர சட்டர்ஜி, K.C.சென் போன்ற சீர்திருத்தவாதிகள் மக்களுக்கு உற்சாகமூட்டினார். மேற்கத்திய தாராள சிந்தனையில் பரவியதும் சமூக பண்பாட்டு விழிப்புணர்வு தோன்றியது. இந்தியா பண்பாட்டில் இருந்த குறைகளை களைந்து இந்தியாவின் பழம்பெரும் கலாச்சார புகழை மீண்டும் கொண்டுவர விரும்பினார். அவர்கள் பல்வேறு சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்தனர். இதன் மூலம் இந்தியா சமுதாயத்திலுருந்து குறைகளை களைய முற்பட்டனர். இத்தகைய சூழலில் தோன்றிய சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.

17) இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க.

**பதில் : ராமகிருஷ்ண பரமஹம்சர்:**

1. இராமகிருஷ்ண பரமஹம்சர் பஜனைப் பாடல்களை மனமுருகிப் பாடுவதைப் போன்ற வழிமுறைகள் மூலம் பேரின்ப நிலையை அடைந்து அந்நிலையில் ஆன்மரீதியாக கடவுளோடு ஒன்றிணைவதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
2. அவர் கடவுளின் திருவிளையாடல்கள் முடிவற்றவை என அறிவித்தார்.
3. அவருடைய கருத்தின்படி அனைத்து மதங்களும் உலகளாவிய, எல்லோருக்குமான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பின்பற்றினால் அவை வீடுபேற்றிற்கு இட்டுச் செல்லும்.
4. சேவையே தேவை மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றார்.
5. இராமகிருஷ்ணருடைய முதன்மையான சாதனை பகுத்தறிவுக் கருத்துக்களின்பால் அதிருப்தியுற்றிருந்த கல்வியறிவு பெற்ற இளைஞர்களைத் தன்பால் ஈர்த்தது ஆகும்.

**சுவாமி விவேகானந்தர்:**

1. சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணரின் கருத்துக்களால் கவரப்பட்டார்.
2. அவர் நடைமுறை வேதாந்தமான மனிதகுலத்திற்கு தொண்டுசெய்தல் எனும் கோட்பாட்டினைப் பரிந்துரைத்தார்.
3. பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அவர் இந்து சமூகத்திற்குப் புத்துயிர் அளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
4. அவருடைய சிந்தனைகள் மேலைநாடுகளின் சாதனைகளைக் கண்டு தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த இந்தியர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுவதாய் அமைந்தது.
5. 1893 இல் சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் இந்து சமயம் பற்றியும் பக்திமார்க்கத் தத்துவம் குறித்தும் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அவருக்குப் பெரும்புகழ் தந்தது.
6. விவேகானந்தரின் செயலாக்கமிக்க கருத்துகள் மேற்கத்திய கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை ஏற்படுத்தியது.
7. சுவாமி விவேகானந்தர் 'ராமகிருஷ்ணா மிஷன்' எனும் அமைப்பை உருவாக்கினார். இவ்வியக்கம் மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவது, மருத்துவ உதவி, இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்வது போன்ற சமூகப்பணிகளிலும் செயலூக்கத்துடன் ஈடுபட்டுள்ளது.

18) பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

**பதில் : இராஜா ராம்மோகன்ராய்:**

1. சமூகத்தில் நிலவி வரும் உடன்கட்டை ஏறுதல் (சதி) குழந்தைத் திருமணம், பலதாரமணம் போன்ற பழக்கங்கள் குறித்து பெரிதும் கவலை கொண்டார். மேலும் அவற்றிற்கு எதிராகச் சட்டங்கள் இயற்றும்படி ஆங்கில அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார்.
2. விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள உரிமையுடையவர்கள் எனும் கருத்தை முன் வைத்தார்.
3. பலதார மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றார்.
4. உடன்கட்டை ஏறும் வழக்கத்தை எதிர்த்தார்.
5. 1829 இல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 'சதி' எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்துச் சட்டம் இயற்றியதில் ராஜா ராம்மோகன்ராய் முக்கியப் பங்குவகித்தார்.
6. பெண்ணடிமைத் தனத்தைக் கண்டனம் செய்தார். மேலும் பெண்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும் எனும் கருத்தை வலுவாக முன் வைத்தார்.

**ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்:**

1. வித்யாசாகர் விதவைப் பெண்களை எரிப்பதும் விதவை மறுமணத்தைத் தடைசெய்வதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கு மறை நூல்களிலிருந்தே சான்றுகளை முன்வைத்தார்.
2. இவரது முயற்சியினால் 1856 இல் மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது.
3. பெண்கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றினார். அவர் பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார்.

**M.G ரானடே:**

ரானடே சாதிமறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். மேலும் 1861 இல் விதவை மறுமணச் சங்கம் என்ற அமைப்பையும் நிறுவினார்.

**சுவாமி தயானந்த சரஸ்வதி:**

குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் திருமணத்தை ஆதரித்தார்.

**ஜோதிபா பூலே:**

1. பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தைக் குறிப்பாக மறுமணம் மறுக்கப்பட்ட உயர் சாதி இந்துக்களின் மறுமணத்தை ஆதரித்தார்.
2. ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர்.
3. ஜோதிபா பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும், விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார்.

19) ஸ்ரீ நாராயண குரு பற்றி விவரி

**பதில் :** 1. 1854 இல் கேரளாவில் ஏழைப் பெற்றோருக்கு மகனாக ஸ்ரீநாராயணகுரு பிறந்தார்.
2. அவர் மலையாளம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார்.
3. சாதிக்கொடுமைகளையும், ஒடுக்கப்பட்ட மக்கள் படும் துயரங்களையும் கண்டு மனம் வெதும்பிய நாராயணகுரு அம்மக்களின் மேம்பாட்டிற்காக தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்.
4. அவர்களின் மேம்பாட்டிற்குப் பணியாற்றுவதற்காக 'ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகம்' எனும் அமைப்பை உருவாக்கினார்.
5. அருவிபுரம் எனும் ஊரில் ஒரு பெரிய கோவிலைக் கட்டிய அவர் அதை அனைவருக்கும் அர்ப்பணித்தார்.
6. குமாரன்ஆசான், டாக்டர் பால்பு போன்ற சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் இவருடைய சிந்தனைகளால் தூண்டப்பெற்று இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர்.